சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்

O.S. No.12/2020

2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15–ஆம் நாள் பி.சா.1 சாட்சி திருமதி.வெங்கிட்டம்மாள் என் முன் சாட்சியாக விசாரிக்கப்படுபவர். 1969ம் ஆண்டு 24வது சட்டப்பிரிவு 4(1) ஏற்பாட்டின்படி உயர்திரு.கே.எஸ்.ஷபீனா, பி.ஏ., பி.எல்., சார்பு நீதிபதி, சத்தியமங்கலம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திருமதி.வெங்கிட்டம்மாள் | தொழில் | : |
| க/பெ | : சின்னசாமி | கிராமம் | : கொத்தமங்கலம் |
| வயது | : | தாலுக்கா | : சத்தியமங்கலம் |

பி.சா.1 : முதல் விசாரணை:

நான் இவ்வழக்கில் பிரதிவாதி ஆவேன். என் தரப்பில் சாட்சியமாக விசாரணை செய்ய பிரமாணவாக்குமூல பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பிரமாணப்பத்திரிக்கையில் கண்டுள்ள சங்கதிகளை அறிவேன். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்ககோருகிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான்.

ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

கோபிசெட்டிபாளையம் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண்.17/2018ல் தாக்கல் செய்துள்ள தாவாவின் அலுவலக நகல் பி.சா.ஆ.1 ஆகவும், மேற்படி வழக்கில் பிறப்பித்த உத்தரவின் இணைய நகல் பி.சா.ஆ.2 ஆகவும், பிரதிவாதியின் கணவர் சின்னசாமியின் பெயரில் உள்ள சிறு குறு விவசாயிகள் அடையாள அட்டையின் அசல்

பி.சா.ஆ.3 ஆகவும் ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது. (பி.சா.ஆ.3 ஆனது வாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது). மேற்படி ஆவணங்களின் பரிசீலனையில் தாவாவை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.